**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. No .76 /2015**

**14.02.2025 அ.சா.12 மரு. செல்வமுத்துக்குமரன் த/பெ.குணசேகரன்**

**Accused Present.**

**எதிரி தரப்பில் 311 மனு அனுமதிக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை -**

(1) காயமுற்ற சக்திவேல் 31.08.2013 ம் தேதியன்று மதியம் 4.00 மணிக்கு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவருக்கு விபத்து பதிவேட்டு வழங்கிய மருத்துவர் யார் என்றால் எனக்கு நினைவில்லை. நான் விபத்து பதிவேட்டை பார்க்கவில்லை. நோயாளிக்கு குடல் கிழிந்திருக்க கூடும் என்று கருதி தான் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. என்னென்ன பரிசோதனை செய்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அவரை 01.09.2013 ம்தேதியன்று காலை 7.30 மணிக்கு பரிசோதனை செய்தேன். அவருக்கு நான்தான் அறுவை சிகிச்சை செய்தேன். சிறுகுடலில் கிழிந்த ஓட்டை இருந்தது. அது சிறுங்குடலும், பெருங்குடலும் சேரும் இடத்திற்கு 100 செமீ மேலே இருந்தது. அறுவை சிகிச்சை செய்தபின்னர் அவர் கண்விழிக்கவில்லை. அவர் அறுவை சிகிச்சையில் இருந்து செயற்கை சுவாசத்தில் தான் இருந்தார். அந்த நிலையிலேயே அவர் உயிர் பிரிந்தது. அவரை மேல் சிகிச்சைக்கு பெரிய மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்தால் பிழைக்க வாய்ப்புண்டு என்று சொன்னால் குறைந்த வாய்ப்பு இருந்தது. குடிப்பழக்கம் அதிகம் உள்ள ஒரு நபர் கீழே விழுந்தால் மேற்படி காயம் ஏற்பட வாய்ப்புண்டு. நான் வழக்கு வரலாறை கேட்டபின்னர் தான் அறுவை சிகிச்சை செய்தேன். நான் சரியான முறையில் சிகிச்சை வழங்காத காரணத்தால் தான் மேற்படி நபர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C.Gopinath.,M.L.,
Additional District Judge,
Tiruvannamalai.

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.

## TIRUVANNAMALAI.

## S.C. No .76 /2015

**14.02.2025 அ.சா.1 மீனாட்சி, க/பெ.சக்திவேல்**

**Accused Present.**

**எதிரி தரப்பில் 311 Crpc மனு அனுமதிக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை -**

(1)அ.சா.2 பானுமதி என் மாமியார். அ.சா.4 செல்வராஜ் எனது மாமனார். என் மாமியார் பானுமதி அரசியல் கட்சி ஒன்றில் ஒரு பொறுப்பில் உள்ளார் என்றால் சரிதான். சண்டை சச்சரவு காரணமாக என் மாமனாரும், மாமியாரும் தனித்தனியாக வாழ்கிறார்கள் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது நான் என் மாமியார் வீட்டில் தான் இருந்தேன். என் கணவரை முதலில் தீர்த்தமலை மருத்துவமனைக்கு என் மாமியார் அழைத்து சென்றார். என் மாமியார் என் கணவரை எந்த தேதியில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் தேதி எனக்கு ஞாபகமில்லை. நான் என் கணவருடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை. குழந்தைகளுடன் வீட்டில் இருந்தேன். என் மாமியார் எனது கணவரை ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். என் கணவருக்கு அடிப்பட்ட விவரம் என் மாமியார் சொல்லி தான் எனக்கு தெரியும். சம்பவத்திற்கு 3 ஆண்டுகளுக்கு முன்னர் உள்ள காலத்திற்கு கோயிலுக்கு சொந்தமான கடைகள் எதுவும் ஏலத்தில் விடப்படவில்லை என்றால் சரிதான். என் மாமியார் கடை நடத்தும்போது ஏலத்தில் விடப்பட்ட கடை எதுவும் இல்லையென்றால் எனக்கு தெரியாது. சம்பவத்தின்போது ஏழுமலை என்பவர் ஏலத்தில் எடுத்த கடையையும் நடத்தவில்லை என்றால் சரியல்ல.

(2) என் கணவர் மீது கல்லை எடுத்துபோட்டார்கள் என்று சொல்லும்போது நான் என் வீட்டில் தான் இருந்தேன். என் கணவர் இறந்தபின்னர் தான் சென்று பார்த்தேன். அவருக்கு சிகிச்சை அளித்த விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. இந்த சம்பவத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் நான் என் அம்மா வீட்டில் இருந்ததால் தான் இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியவில்லை என்றால் சரியல்ல. என் மாமியாரும், மாமனாரும் 15 வருடமாக

பிரிந்து வாழ்கிறார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் அடிக்கடி குடித்துவிட்டு எங்கோ கீழே விழுந்து இறந்துவிட்டார் என்றால் நான் அதை மறுக்கிறேன். இந்த வழக்குக்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் சரியல்ல. சம்பவத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சுங்கம் வசூலிப்பதில் என் கணவருக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட தகராறில் என் கணவர் இறந்த வழக்கில் எதிரியை தவறாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் குடித்துவிட்டு கீழே விழுந்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C.Gopinath.,M.L.,**

**Additional District Judge,**

**Tiruvannamalai.**

# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.

## TIRUVANNAMALAI.

## S.C. No .76 /2015

**14.02.2025 அ.சா.4 செல்வராஜ், த/பெ.சின்னராஜ்**

**Accused Present.**

**எதிரி தரப்பில் 311 Crpc மனு அனுமதிக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை -**

என் மனைவி பெயர் பானுமதி. என் மனைவி அரசியல் கட்சியில் ஒரு பொறுப்பில் உள்ளார் என்றால் சரிதான். என் மனைவி அரசியலில் ஈடுபட்டதால் மனஸ்தாபத்தால் நானும் என் மனைவியும் பிரிந்து வாழ்கிறோம் என்றால் சரியல்ல. போலீசார் விசாரணையில் இளங்குண்ணி கிராமத்தில் வசிப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அங்கு போவேன் வருவேன் என்று சொல்லியுள்ளேன். போலீசார் என்னை விசாரித்தபோது என் மனைவி பானுமதி செங்கம் ராஜவீதியில் வசித்து வருகிறார் என்று சொல்லியுள்ளேன். என் மகன் ஓட்டுனராக பணி செய்து வந்தார். என் மகனுக்கு அடிப்பட்டதை நான் நேரடியாக பார்க்கவில்லை. மருத்துவமனைக்கு என் மனைவி என் மகனை அழைத்து சென்றார். 2 நாட்கள் கழித்து தர்மபுரி மருத்துவமனையில் என் மகனை போய் பார்த்தேன். அதன்பின்னர் அவர் இறந்துவிட்டார். நான் அவருக்கு காயம் எங்கு ஏற்பட்டது என்று பார்க்கவில்லை. சம்பவத்திற்கு முன்னர் 3 வருடத்திற்கு முன்னர் கடைகளை ஏலம் விடுவதை நிறுத்திவிட்டார்கள் என்றால் என் மகன் இறந்துவிட்டபின்னர் தான் நிறுத்திவிட்டார்கள். சம்பவத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் சுங்கம் வசூலிப்பதில் என் மகனுக்கும் எதிரிக்கும் ஏற்பட்ட தகராறில் என் மகன் இறந்த வழக்கில் எதிரியை தவறாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல. என் மகனுக்கு குடிப்பழக்கம் உள்ளது என்றால் எனக்கு தெரியாமல் குடிப்பார். என் மகன் எந்தவொரு வேலைக்கும் போகாமல் எங்கோ குடித்துவிட்டு தவறி கீழே விழுந்து ஏற்பட்ட

இறந்தார் என்றும், எதிரிக்கும் என் மகன் இறப்புக்கும் எந்த சம்மந்தமும் இல்லையென்றால் தவறு.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C.Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. No .76 /2015**

**14.02.2025 அ.சா.13 மரு. கிருஷ்ணகுமார் த/பெ. சுப்பிரமணியன்**

**Accused Present.**

**எதிரி தரப்பில் 311 மனு அனுமதிக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை -**

நான் எனது பிரேத பரிசோதனை சான்றில் குறிப்பிட்டுள்ள முதல் காயம் அறுவை சிகிச்சை செய்தபின்னர் போடப்பட்ட தையலா என்றால் சரிதான். 3 வது காயமான சிராய்ப்பு காயம் விரைப்பையில் எந்த இடத்தில் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த சிராய்ப்பு காயம் எந்த ஆயுதத்தால் ஏற்பட்டது என்று காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த சிராய்ப்பு காயம் 24 மணி நேரத்திற்கு முன்னர் ஏற்பட்டிருக்கும் என்றால் சரிதான். சிறுகுடலின் ஒரு பகுதி தடய ஆய்வியல் துறைக்கு அனுப்பப்பட்டது. மதுபோதையில் இருக்கும் ஒரு நபர் கீழே விழுந்தால் குடலில் காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. பிரேத பரிசோதனை செய்த அன்றே பிரேத பரிசோதனை சான்று வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். எனது சான்றிதழில் மேற்படி நபர் சிறுகுடலில் ஏற்பட்ட Septic shock ஆல் இறந்திருப்பார் என்று கருத்து தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். நான் எனது நீதிமன்றத்தில் என்ன சாட்சியம் அளித்தேனோ அதையே தான் எனது போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன்.

**Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.**

**Sd/-B.C.Gopinath.,M.L.,**
**Additional District Judge,**
**Tiruvannamalai.**